**DEPOSITION OF WITNESS**

| | | |
|---|---|---|
| IN THE COURT OF | : | Judicial Magistrate, Thuraiyur. |
| Case No. | : | STC.181/2026 |
| Prosecution Witness | : | PW 1 |

26.05.2026

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : K.லோகநாதன் | Calling | : | |
| Father Name | : கருப்பையா | | : | |
| Village | : உப்பிலியபுரம் | Age | : | 57 |
| Taluk | : துறையூர் | | | |

**சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.**

எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>

நான் உப்பிலியபுரத்தில் வசித்து வந்து முன்னால் இராணுவ வீரராக பணிபுரிந்து ஓய்வு பெற்று விட்டேன். ஆஜரெதிரி எனக்கு அண்ணன் முறை ஆவார். சுமார் 1 வருடங்களுக்கு முன்பு தேதி மாதம் தற்போது ஞாபகம் இல்லை. மாலை 6.00 மணியளவில் நான் பணி முடிந்து வீட்டிற்கு வந்து கொண்டிருந்த போது எனது மனைவியை யாரோ அடையாளம் தெரியாத ஒரு நபர் அசிங்கமான வார்த்தைகளால் திட்டியும், என் மகன் ரோகித் மற்றும் வேலாயுதத்தை அடித்து கொலை மிரட்டல் விடுத்துள்ளார். அந்த நபர் யார் என்று எனக்கு தெரியாது. ஆஜர் எதிரி மீது இருந்த முன் விரோதம் காரணமாக அவருக்கு எதிராக புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படுத் புகாரில் உள்ள கையெப்பம் என்னுடையது தான். **புகாரில் உள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு சம்பந்தமாக வேறு எதுவும் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>பாரதிய சாக்ஷிய அதிநியம் பிரிவு 157(1)ன் கீழ் அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

நான் எதிரியுடன் நீதிமன்றத்திற்கு வெளியே சமதனமாகி சமதானம் மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த சமதான் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.கடந்த 21.11.2023 ம் தேதி மாலை 6.45 மணியளவில் உப்பிலியபுரம் சந்தை அருகில் வைத்து எனது மனைவி மகன் வேலாயுதம் ஆகியோர்களை பொது இட்த்தில் வைத்து தகாத வார்த்தையால் பேசினார் என்றால் சரியல்ல. எனது மனைவி மகன் வேலாயுதம் ஆகியோர்களை எதிரியனவர் விரட்டி அடித்துள்ளார் என்றால் சரியல்ல. வேலாயுதம் என்பவரை எதிரியானவர் வெட்டுவேன் குத்துவேன் வாழ விடமாட்டார் என்று மிரட்டினார் என்றால் சரியல்ல. அது சம்பந்தமாக உப்பிலியபுரம் பேருராட்சியில் இழ செயல் அலுவலர் எடுத்து கூறிஹயம் எதிரி ஆனவர் ஒருமையில் பேசினார் என்றால சரியல்ல. மேற்படி சம்பவம் தொடர்பாக போலிசாரிடம் புகார் மனு கொடுத்தேன் என்று போலிசார் விசாரணையில் சொல்லி விட்டு தற்போது எதிரியுடன் சமதனமாகி விட்டதால் அவரை வழக்கில் இருந்து காப்பாற்றுவதற்காக உண்மை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை</u>

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

ஒப்பம்/–R.சுரேஷ் குமார்,
நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ),
துறையூர்.